பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஐப்பசி 26 புதன்கிழமை (11-11-1992) UTHAYAN — A Lively National Tamil Daily ஒளி: 349

# மணலாறில் அதிரடி! ஏழு படையினர் பலி!!

## மேலும் பல படையினர் காயம்

யாழ்ப்பாணம், நவம்பர் 11

நேற்று முன்தினம் மணலாறுப் பகுதியிலிருந்த ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் காவலரண் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் ஏழு இராணுவத்தினர் உயிரிழந்தனர். மேலும் பல படையினர் காயங்களுடன் தப்பி ஓடினர்.

மணலாறு சோமாவில் இராணுவ முகாமிற்கும் தென்னமரவாடி இராணுவ முகாமுக்கும் இடையில் அமைந்திருந்த காவலரண் ஒன்றின் மீதே மாலை 4.30 மணியளவில் இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

நான்கு நிமிட நேரத் தாக்குதலில் காவலரண் புலிகள் வசம் வீழ்ந்தது. காவலரணில் இருந்த ஆயுதங்களைப் புலிகள் கைப்பற்றினர்.

இத்தாக்குதலின் போது விடுதலைப் புலிகளுக்கு எந்த வித இழப்பும் ஏற்படவில்லை. இச்சம்பவத்தில் ஏழு படையினர் உயிரிழந்ததை கொழும்பின் பாதுகாப்பு வட்டாரங்கள் ஒப்புக்கொண்டன. (உ-த-எ-3-6)

### மீட்கப்பட்ட ஆயுதங்கள்

நேற்று முன்தினம் மணலாறில் காவலரண் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுத தளபாட விவரம் வருமாறு:-

★ ஜி3 ஏ3 துப்பாக்கிகள் -06
★ சுதந்திரிய மகஸின்கள் -34
★ ரி56 ரக துப்பாக்கிகள் -03
★ தொலைத் தொடர்பு சாதனம் -1
★ ஏ. கே. மகஸின்கள் -15
★ நேட்டோ ரவைகள் -836
★ நடுத்தர ரவைகள் -574
★ ஜே. ஆர் கைக்குண்டு -12
★ ஏ. கே. ஹோல்சர் -10
★ இராணுவ பைகள் -02
★ இராணுவ பட்டிகள் -04
★ இராணுவ தொப்பி -01
★ தண்ணீர் தாங்கி -01

(உ-3)

### அம்பாறையில் சண்டை

கொழும்பு, நவ. 11

அம்பாறை மாவட்டம் வீரகைபுரம் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும், அதிரடிப் படையினருக்கும் இடையில் மோதல் இடம் பெற்றதாக பாதுகாப்பு வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன. (உ-எ-3-6)

### தெரிவுக்குழுவின் கூட்டம் கோரமின்றி ஒத்திவைப்பு

#### மீண்டும் இன்று கூடுகிறது

கொழும்பு நவ 11

நாடாளுமன்றத் தெரிவுக் குழு திட்டமிட்டபடி தனது கூட்டத்தை கடந்த மாதம் 28 ஆம் திகதி நடத்த முடியவில்லை.

அன்றைய தினம் நடைபெறவிருந்த கூட்டத்தில் தெரிவுக் குழுத் தலைவர் மங்கள முனசிங்காவினால் தமிழ்க் கட்சிகளிடமும் ஏனைய அரசியல் கட்சிகளிடமும் சமர்ப்பிக்கப்பட்ட விருப்பயோசனைகளை ஆராய்வதும்—

இந்த யோசனைகள் தொடர்பாக தமிழ்க் கட்சிகளின் பதிலை பரிசீலனை செய்வதும் இடம்பெற இருந்தது.

(2 ஆம் பக்கம் பார்க்க)

### இராணுவ நடவடிக்கை முடிவு

கடந்த மூன்று தினங்களாக மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கை முடிவடைந்து விட்டதாக நேற்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த நடவடிக்கைக்கு 'ஜெயபஹர' என அரச தரப்பினர் பெயர் சூட்டியிருந்தது தெரிந்ததே. (உ-6)

# புலிகளை வெல்லும் நம்பிக்கையை முற்றாக இழக்கும் நிலையில் அரசு!

## பேச்சைப் பாதிக்கும் இராணுவ நடவடிக்கைகளும் இடம்பெறமாட்டா

கொழும்பு, நவ 11

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையான பேச்சுக்களைப் பாதிக்கக் கூடியதான இராணுவ நடவடிக்கை எதற்கும் அரசியல் தலைமைத்துவம் உத்தரவிடும் வாய்ப்பு எதுவும் இல்லை'

"கிழக்கில் உள்ள அபாயகரமான நிலவரம்" -என்ற தலைப்பில் ஷமிந்திரா பெர்டினன்டோ சண்டே ஐலண்ட் வார இதழில் எழுதிய விமர்சனக் கட்டுரையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் வெற்றி கொள்ள இயலும் என்ற நம்பிக்கையை பெரும்பாலும் முற்றாகக் கைவிடும் நிலையில் அரசாங்கம் இருப்பதாக பகுப்பாய்வாளர்கள் எண்ணுகின்றனர்.

வடக்கு-கிழக்கு மோதலை முடிவுக்குக் கொண்டு வரும் எண்ணத்துடன் பிரேமதாஸ அரசு விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களைத் தொடரும் என பரவலாக ஊகம் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு-கிழக்குப் பிரச்சினையில் ஐ.நா.வின் தலையீட்டைப் பகிரங்கமாகக் கோருவதன் மூலம் விடுதலைப் புலிகளும் அரசின் மீது அழுத்

(2 ஆம் பக்கம் பார்க்க)

# தெரிவுக்குழுவில் இ.தொ.கா. தொடர்ந்தும் பங்குபற்றுமா?

## தீவிரமாக மீள்பரிசீலனை செய்கிறார் தொண்டமான்

கொழும்பு, நவ. 11

தெரிவுக்குழு நடத்திவரும் பேச்சுகள் யதார்த்த நிலைக்குப் புறம்பாக இருக்கின்றன; தொடர்ந்து பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வது குறித்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைமைப் பீடம் தீவிரமாக மீள்பரிசீலனை செய்துவருகிறது.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் தலைவர் திரு. மங்கள முனசிங்காவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் ஒன்றில் அமைச்சர் எஸ். தொண்டமான் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

"நாடாளுமன்றத் தெரிவுக் குழு வேகமாகச் செயல்படுவதில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். ஒரு யோசனைக்கு அடுத்து இன்னொரு யோசனை என்று தேவையற்ற விதத்தில் சமர்ப்பித்து தனது சக்தியை தெரிவுக்குழு விரயமாக்கிக் கொண்டு போனால் ஒரு பயனும் ஏற்படப்போவதில்லை — இவ்வாறு அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [illegible] விபரமும் 5 ஆம் பக்கத்தில்.

## மாவீரர் வாரத்திற்கு முன்னர் 15 ஆம் திகதி முதல் மாவீரர் எழுச்சி வாரம்

யாழ்ப்பாணம், நவ. 11

மாவீரர் வாரத்துக்கு முன்னோடியாக — மக்களிடையே எழுச்சியை ஊட்டும் வகையில்- எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை மாவீரர் எழுச்சி வாரம் கொண்டாடப்படவிருக்கிறது.

விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட அரசியல், நிர்வாகப் பொறுப்பாளர் திரு. சி. இளம்பரிதி இத்தகவலைத் தெரிவித்தார்.

எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை கொண்டாடப்பட இருக்கும் மாவீரர் வாரத்தின் ஏற்பாடுகள் குறித்து விளக்குவதற்காக நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இத்தகவலை வெளியிட்டார்.

தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. பொன். தியாகமும் இச்சந்திப்பின் போது உடனிருந்தார்.

இந்த எழுச்சிவாரத்தில் மக்கள் தமது இல்லங்கள், வீதிகள், பொது இடங்கள் ஆகிய

(6 ஆம் பக்கம் பார்க்க)

# விமானப்படைக்கு மேலும் ஹெலிகள்

கொழும்பு, நவ. 11

ஸ்ரீலங்கா விமானப் படைக்கு ஹெலிக்கொப்டர்களை கொள்வனவு செய்வதற்காக விமானப் படை அதிகாரிகள் குழு ஒன்று ஆர்ஜென்ரீனாவுக்குச் சென்றிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

புக்காரா (Pukara) ரக ஹெலிக்கொப்டர்களை வாங்குவது பற்றிய சாத்தியக் கூறுகளை ஆராயவே விமானப் படைக்குழு அங்கு சென்றிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

துக்கானோ (Tucano) ரக ஹெலிக்கொப்டர்களை வாங்குவது பற்றி முன்னர் ஆராயப்பட்டது.

இந்த இரண்டில் எந்த வகை ஹெலிக்கொப்டர்களை வாங்குவது என்பது குறித்து விமானப்படை உயர்மட்டத்தில் கருத்துவேறுபாடு நிலவுவதாகவும்—

புக்காரா ரக ஹெலிக்கொப்டர்களை வாங்கக் கூடாது என்று வாதாடுபவர்கள், அந்த ரக ஹெலிக்கொப்டர்கள் உற்பத்தி செய்யப்படுவது 1986 உடன் நிறுத்தப் பட்டுவிட்டது என்று காரணம் காட்டுவதாகவும் "சண்டே ரைம்ஸ்" தகவல் வெளியிட்டுள்ளது. (உ-எ)

# கிளாலி கடலில் மோதல்

கிளாலி—ஆனையிறவு கடற் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் கடற்படையினருக்கும் நேற்று முன்தினம் இரவு 9 மணி முதல் கடும் மோதல்கள் இடம் பெற்றதாக தெரியவருகிறது.

ஒரு மணி நேரம் விடாது வேட்டுகள் தீர்க்கப்பட்டன. புலிகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாமல் கடற்படையினர் ஆலடி, கல்முனைப் பக்கமாகப் பின்வாங்கினர் என்று தெரிவிக்கப்பட்டது.

இம் மோதலின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் கப்டன் மதியழகன் அல்லது மதன் (நடராஜா ரதீஸ்குமார்-அல்லாய் தெற்கு) வீரமரணமடைந்தார்.

இம் மோதலினால் இந்தக் கடற்பகுதியூடான போக்குவரத்து நேற்று முன்தினம் இரவு பெரிதும் பாதிக்கப்பட்டது. (உ-3-17-117)

# சணக, அஷ்ரப், ஒஸிக்கு அமைச்சர் பதவிகள்?

கொழும்பு, நவ. 11

அடுத்த மாதம் இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படும் அமைச்சரவை மாற்றத்தின் போது—

திரு ஒஸி அபேகுணசேகர, ஜனாப் எம். எச். எம். அஷ்ரப், திரு. சணக அமரதுங்க ஆகியோர் அமைச்சர் பதவிகளைப் பெறுவர் என்று கொழும்பில் ஊகம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் ஒரு பிரிவின் தலைவராக ஒஸி அபேகுணசேகராவும் —

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவராக ஜனாப் அஷ்ரபும் —

லிபரல் கட்சியின் தலைவராக திரு. சணக அமரதுங்காவும் உள்ளனர்.

இதேவேளை —

லண்டனில் தங்கியிருக்கும் முன்னாள் நிதியமைச்சர் றொனி டிமெல் விரைவில் கொழும்பு திரும்பி ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்வார் என்றும் —

பின்னர் பிரதமர் மற்றும் நிதி அமைச்சராக அவர் நியமிக்கப்படுவார் என்றும் முன்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## ஆண்டு-6 அனுமதிப்பரீட்சை ஒத்திவைக்கப்பட்டது

யாழ்ப்பாணம், நவ 11

1993 ஆம் ஆண்டில் ஆண்டு 6 இற்கு மாணவர்களை அனுமதிப்பது தொடர்பாக தேசிய பாடசாலைகளிலும், தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளிலும் எதிர்வரும் 15, 16 ம் திகதிகளில் நடைபெறவிருந்த அனுமதிப் பரீட்சைகள் ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக யாழ். பிரதேசக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

பரீட்சை ஒத்திவைக்கப்பட்டிருப்பதற்கான மூன்று காரணங்களையும் அவர் வெளியிட்டிருக்கிறார்.

★ ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு, தேசியப் பாடசாலையில் ஆண்டு 6 அனுமதி வழங்குவதில் முன்னுரிமை கொடுக்க வேண்டியுள்ளது. கடைசியாக நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள் முன்னர் எதிர்பார்த்ததிலும் பார்க்க முன்கூட்டியே வெளிவரவுள்ள

(2 ஆம் பக்கம் பார்க்க)

வனம் ஓங்க வளம் ஓங்கும்
வளம் ஓங்க தனம் ஓங்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15-ம் திகதிக்கு முன் பழைய இடங்களில் குடியேறுமாறு அதிகாரிகள் காலக்கெடு!

## மன்னாரில் 50 ஆயிரம் அகதிகள் திண்டாட்டம்

மன்னார், நவ. 11

இராணுவ நடவடிக்கை காரணமாக தலைமன்னார் துறை கிழக்குப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து வெளி இடங்களில் அகதிகளாகத் தங்கி உள்ள சுமார் 50 ஆயிரம் மக்களை அவர்களின் சொந்த இடங்களுக்குத் திரும்பி மீளக் குடியேறுமாறு அரச அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர்.

இம்மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் இவர்களை தமது சொந்த இடங்களுக்குத் திரும்பாவிடின் தற்போது இவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் அனைத்தும் நிறுத்தப்படும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எனினும் தலைமன்னார் துறையில் தற்போது தொழில் வசதி எதுவும் கிடையாது என்றும்—

வீட்டு வசதி இல்லை என்றும்—

இந்த அகதிகளில் பெரும்பாலானோர் அதிகாரிகளிடம் முறையிட்டு திரும்பிச் செல்ல மறுத்து வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் கிராமசேவகர்களும், அரச அதிகாரிகளும் அகதிகள் மீளக் குடியேற உள்ள தலைமன்னார் துறை கிராமப் பகுதிகளுக்கு விஜயம் செய்திருந்தனர்.

அவர்களுடன் அகதிகளில் 50 பேரும் கூடச் சென்றிருந்தனர்.

அவர்கள் அங்கு சென்ற போது அகதிகள் மீளக் குடியேற முடியாத விதத்தில் வீடுகள் உடைக்கப்பட்டிருந்தன என்று தெரிவிக்கப்பட்டது.

அப்படி இருந்தும் இந்த அகதிகளை மீண்டும் பழைய இடங்களுக்கு செல்லுமாறு அதிகாரிகள் உத்தரவிட்டு காலக்கெடுவும் விதித்துள்ளதால் சுமார் 50 ஆயிரம் மக்கள் பதற்ற நிலையில் இருந்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (இ)

## சோற்றுப் பார்சலில் கைவிரல்!

கொழும்பு, நவ. 11

கொழும்பு மாளிகாவத்தைப் பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றில் வாங்கிய சோற்றுப் 'பார்சல்' ஒன்றினுள் மனிதக் கைவிரல் துண்டு ஒன்று காணப்பட்டதாம்.

இது தொடர்பாகப் பொலிஸாருக்குக் கிடைத்த முறைப்பாட்டைத் தொடர்ந்து அந்த ஹோட்டல் 'சீல்' வைக்கப்பட்டு, அங்கு வேலை செய்த 8 பேரும் விசாரணைக்காக கூட்டிச் செல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

## அரசு-புலிகள் ரகசிய பேச்சு; செய்திக்கு அரசு மறுப்பு

கொழும்பு, நவ. 11

விடுதலைப் புலிகள் தலைவர் திரு. பிரபாகரனுடன் இரகசியப் பேச்சுக்களை நடத்த அரசாங்கம் தயாராக இருப்பதாக வதந்திகள் பரவியுள்ளன என்று சிறீலங்கா பாதுகாப்புச் சங்கத் தலைவரும் முன்னாள் அமைச்சருமான காமினி ஜெயசூரியா தெரிவித்தார் என 'திவயின' சிங்கள நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

இச் செய்தியில் உண்மை கிடையாது என்றும் செய்தி தவறானது என்றும் அதிகார பூர்வ வட்டாரங்கள் தெரிவித்ததாக இலங்கை வானொலி அறிவித்தது.

அனைத்துத் தரப்பினரும் ஏற்கக் கூடியதான தீர்வு ஒன்றை இனப்பிரச்சினைக்குக் காணுவதில் நாடாளுமன்றத் தெரிவுக் குழு ஈடுபட்டிருப்பதாகவும் —

இனப்பிரச்சினைத் தீர்வுக்காக விடுதலைப் புலிகளுடனோ அல்லது வேறு எந்த அமைப்புகளுடனோ இரகசியப் பேச்சுக்கள் எதையும் அரசு நடத்தவில்லை என்றும் —

எதிர் காலத்தில் அப்படி நடத்தும் உத்தேசம் அரசுக்கு இல்லை என்றும் — அதிகார பூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த அடிப்படையில் காமினி ஜெயசூரிய தெரிவித்தார் என்று திவயின பத்திரிகையில் வெளியான செய்தி தவறானதும் உண்மைக்குப் புறம்பானதுமாகும் என்றும் அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-எ)


# மிற்சுபிஷியில்

MITSUBISHI

★ சலுகைகள் ★

மிற்சுபிஷி படச்சுருள்களை கொழும்பு பிரதியாக்கலிற்கு எம்மிடம் தருவதன் மூலம் இரண்டு வகையான விசேட

★ தள்ளுபடி விலை ★

சலுகைகளைப் பெற்றுக் கொள்ளுங்கள்

விவரங்கள் நேரில்:

கலக்சி புகைப்பட சேவை

337, முதலாவது மாடி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(இ-3775)


## கிழக்கில் தமிழ் - முஸ்லிம் கூட்டாட்சி:

# அம்பாறையை ஊவாவுடன் இணைக்க ரெலோ யோசனை

### 1953 விகிதாசாரத்தை மீண்டும் ஏற்படுத்தலாமாம்

கொழும்பு, நவ. 11

அம்பாறைத் தொகுதியைப் பிரித்தெடுத்து அதனை ஊவாவுடன் இணைக்க வேண்டும் என்றும், எல்லைப்புறச் சிங்களக் கிராமங்களை பிரித்தெடுக்க வேண்டும் என்றும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ரெலோ தெரிவித்துள்ள யோசனையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்பாறையைப் பிரித்து ஊவாவுடன் இணைப்பது மூலம் கிழக்கில் 1953 ஆம் ஆண்டு இருந்த இன விகிதாசாரத்தை மீண்டும் ஏற்படுத்த முடியும் என்றும்—

இவ்வாறான நடவடிக்கை கிழக்கில் தமிழ் - முஸ்லிம் கூட்டரசு ஆட்சிக்கு வழி வகுத்து தமிழ்-முஸ்லிம் உறவில் புதிய திருப்பம் ஏற்பட எதிர்பார்க்கலாம் என்றும்— அந்த யோசனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரெலோ இயக்கத்தினால் தயாரிக்கப்பட்டு அடுத்த சில தினங்களில் ஏனைய 6 தமிழ் அரசியல் கட்சிகளின் பரிசீலனைக்குச் சமர்ப்பிக்கப்பட உள்ள இனப்பிரச்சினைத் தீர்வுக்கான யோசனைகளில் அடங்கி உள்ள மற்றும் சில அம்சங்கள் வருமாறு:-

★ வடக்குக்கும்- கிழக்குக்கும் இரு தனியான மாகாண சபைகள் இருக்கவேண்டும். இரு சபைகளுக்குமான கவர்னர் பூரண அதிகாரம் உடையவராக மக்களால் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

★ 1953ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட குடிசன மதிப்பீட்டின் பிரகாரம் கிழக்கில் 48சத வீதத் தமிழர்களும் 42 சத வீத முஸ்லிம்களும் 8 சத வீத சிங்களவர்களும், 2 சத வீதம் ஏனைய சமூகத்தினரும் இருந்தனர். தற்போதைய கணிப்பின்படி 41 சத வீத தமிழர்களும் 31 சத வீத முஸ்லிம்களும் 28 சத வீத சிங்களவர்களும் இருக்கிறார்கள்.

ஆகவே அம்பாறையை ஊவாவுடன் இணைப்பது மூலம் 1953 விகிதாசாரத்தை மீண்டும் ஏற்படுத்தமுடியும்.

★ மாகாண சபைகளுக்குள் அமையும் பிரதேச சபைகளுக்கு கூடிய அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும். இதன் மூலம் முஸ்லிம் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியும்.

இந்த யோசனையை தமிழ் கட்சிகள் சார்பாக தெரிவுக் குழுவிடம் சமர்ப்பித்து அதனை ஏற்கச்செய்ய ரெலோ இயக்கம் வற்புறுத்தும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(வடக்கையும் கிழக்கையும் பிரிக்கும் ரெலோ இயக்கத்தின் இந்த யோசனையின் ஒரு பகுதி நேற்றைய உதயனில் வெளிவந்திருந்தது ) (இ)


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் - நன்றி நவிலலும்



மண்ணில்: 08 — 06 — 1906

விண்ணில்: 12 — 10 — 1992

## கணபதிப்பிள்ளை தங்கமுத்து

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி, மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புத்தெய்வமே! விழுதுகள் போல் வேரூன்ற ஆல் போல் தோள் கொடுத்தீர்கள் அம்மா! அம்மம்மாவே இன்று ஏன் எமை மறந்து சென்று எங்கள் விழிகளுக்கு கண்ணீரை பரிசளித்துவிட்டு மறைந்து போனீர்கள்! ஆயிரமாயிரம் முகங்களின் நடுவே உங்கள் அன்பின் ஒளிவீசும் முகத்தை தேடுகிறோம். 12-10-1992 எமது தாயாரின் மரணச் செய்தி கேட்டு, எங்கள் துயரில் பங்கு கொண்டு ஆறுதல் அளித்த உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகள்.

அன்புத் துயரில் வாடி நிற்கும்:

மகன், மருமகன், சகோதரர்கள், சகோதரி, பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

10ஆம் வட்டாரம், புங்குடுதீவு,
18/4, சந்தனமாதா லேன்,
இராஜ பாண்டியன் வீதி,
பாண்டியன்தாழ்வு.

(5561)


## திருத்த வேலையில் ஈடுபட்டவர்களே வங்கியில் கொள்ளை!

கொழும்பு, நவ. 11

கடந்த சனிக்கிழமை மலாங்கொடையில் உள்ள இலங்கை வங்கிக் கிளையில் இடம்பெற்ற 50 லட்சம் ரூபா கொள்ளையை நடத்திய சூத்திரதாரிகள் அந்த வங்கிக் கிளைக் கட்டடத்தில் திருத்த வேலைகளை மேற்கொண்ட ஊழியரும் (மேசன்) அவரது உதவியாளர்களும் என்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

இலங்கை வங்கிக் கிளைத் தலைவர் ஜெஹான் காஸிம் [illegible]

(ஒ-எ)


# தொழில் நுட்பக் கல்லூரி

யாழ்ப்பாணம்.

## கல்வியாண்டு - 1993

எமது கல்லூரியின் 1993 ஆம் கல்வியாண்டிற்கான பகுதிநேர விரிவுரையாளர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மாதிரி விண்ணப்பப் படிவத்தினையும், பாட விபரங்களையும் கல்லூரியில் பார்வையிடலாம். விண்ணப்பதாரர்கள் தாமே படிவங்களைத் தயாரித்து அதனை, அதிபர், தொழில் நுட்பக் கல்லூரி, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 1992 - 11 - 27 க்கு முன்னர் அனுப்பி வைத்தல் வேண்டும்.

- அதிபர்.

தொழில்நுட்பக் கல்லூரி,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
1992-11-10.

(இ-3690)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### சப்பாத்துக்கு அளவாக காலை வெட்டலாமா?

இனப் பிரச்சினையை — தமிழர் பிரச்சினையைத் — தீர்ப்பதற்குக் காலத்துக்குக் காலம் பல யோசனைகளும், திட்டங்களும் பல்வேறு அரசியல் கட்சிகளாலும், தலைவர்களாலும் முன்வைக்கப்பட்டு வருவது சரித்திரம்.

குறிப்பாக, சட்டசபை இயங்கத் தொடங்கிய முப்பதுகளில் இருந்து தமிழர் பிரச்சினைக்கு எண்ணற்ற தீர்வுகள், திட்டங்கள் என்று முன்வைக்கப்பட்டன, முன்வைக்கப்பட்டு வருகின்றன. ஆனால் அவற்றின் பிரச்சினையைத் தீர்க்கக் கூடிய, நடைமுறைச் சாத்தியமான, சம்பந்தப்பட்டவர்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய அவர்களுக்குத் திருப்தியைத் தரவல்ல எந்தத் திட்டமும் அமுல் செய்யப்படவில்லை. அதனாலேயே தமிழர் பிரச்சினை கடந்த ஆறு தசாப்தங்களாக நீடித்து புதிது புதிதாக மேன்மேலும் சிக்கலடைந்து வருகிறது!

ஆகப் பிந்தி, கடந்த இரண்டரை வருடங்களாக நடைபெற்று வரும் யுத்தச் சூழ்நிலையில், பிரச்சினை முற்றிய பின்னணியில், சுமார் பத்து யோசனைகள், திட்டங்கள் முளைத்துத் தலைகாட்டியுள்ளன. அமைச்சர் தொண்டமானின் திட்டம் முதற்கொண்டு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் தலைவர் மங்களமுனசிங்காவின் இரண்டாவது யோசனை வரை தமிழர் — சிங்களர் — முஸ்லிம்கள் ஆகிய முத்தரப்பினரின் ஏகமனதான ஆதரவைப் பெறவில்லை.

இத்தகைய பின்னணியில், கொழும்பில் உள்ள தமிழ்க் குழுக்கள் கூட்டாக முன்வைத்த மூன்றுக்கும் மேற்பட்ட திட்டங்களை அரசும், சிங்களவர்களும் நிராகரித்த தோல்வி நிலையில், தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ) தானும் ஒரு திட்டத்தைத் தயாரித்து வெளிப்படுத்தி இருக்கிறது!

பிரிக்கப்படாத வடக்கு-கிழக்கு தமிழர் தாயகம் என்பதே சகல ஈழப் போராளிகள் இயக்கங்களினதும் முதன்மைப்பட்ட தாரக மந்திரமாக இருந்தது. 1985 இல் திம்புப் பேச்சுவார்த்தையின் போது ரெலோவும் ஏனைய இயக்கங்களுடன் சேர்ந்து தமிழர் தாயகத்தையே வலியுறுத்தியது. ஆனால் அரசியல் கட்சியாகியதும் அது மறந்து போய், தானே தமிழர் தாயகத்தைப் பிரிக்கும் தீர்வு ஒன்றைத் தயாரித்திருக்கிறது! சாயம் வெளுத்தால் எந்த வேடமும் போடலாம் என்ற நினைப்பில் போலும்!

1953 ஆம் ஆண்டில் கிழக்கில் இருந்த இனவிகிதாசாரத்தைப் பேணுவதற்கு வகை செய்யும் விதத்தில் அம்பாறைத் தொகுதியைக் கிழக்கில் இருந்து பிரித்து ஊவாவுடன் இணைப்பது. எல்லைப்புறச் சிங்களக் கிராமங்களையும் பிரித்தெடுப்பது எனவும் — இவை ரெலோவின் திட்டத்தின் இரண்டாவது முக்கிய அம்சங்களாகும்.

தமிழர் தாயகத்தின் கணிசமான பகுதியை அப்பம்பிய்ப்பது போலப் பிய்த்து சிங்களவருக்குத் தாரை வார்ப்பதாகும் இச்செயல். அம்பாறை என்ற சிங்களப் பகுதியும் தொகுதியும் பாரம்பரிய தமிழ் மண். அபிவிருத்தி என்ற போர்வையில் சிங்களக் குடியேற்றம் நடத்தப்பட்டு டி. எஸ். சேனநாயக்கா காலத்தின் பின்னர் சிங்களப் பிரதேசமானது.

இனவிகிதாசாரத்தைப் பேணுவதற்காக தமிழர்களின் மண்ணை இழந்து போவது காலுக்கு அளவான சப்பாத்தைச் செய்யாமல் சப்பாத்துக்கு ஏற்றமாதிரிக் காலை வெட்டுவதற்கு ஒப்பாகும்.

இந்தத் திட்டம் சிங்கள அரசினால் தயாரிக்கப்பட்டு ரெலோ மூலம் ஏனைய தமிழ்க் குழுக்கள் மீது திணிக்கப்படுவதற்கான ஓர் தந்திரோபாயமாகவும் இருக்கலாம்.

இதனைச் சிங்களவர்கள் ஆதரிப்பார்கள். தமிழர்கள் நிராகரிப்பார்கள் தமிழ் மண்ணைப் பறிகொடுக்கும் எந்தத் தீர்வினாலும் தமிழருக்கு விடிவு ஏற்படாது.

# புலிகளின் தாக்குதலை எதிர்நோக்க அஞ்சும் ஊர்காவல் படையினர்

கிழக்கில் உள்ள அபாயகரமான நிலைவரம்' என்ற தலைப்பில் ஷமிந்திரா பெர்டினண்டோ சண்டே ஐலண்ட் வார இதழில் (08-11-1992) எழுதிய கட்டுரையின் தொகுப்பு இங்கு பிரசுரிக்கப்படுகின்றது.

மாத்தளை மாவட்டத்தில் சுமார் 230 ஊர்காவல் படையினர் பணிபுரிந்து வந்தனர்.

விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு உள்ளாகும் எல்லைப்புறச் சிங்கள, முஸ்லிம் கிராமங்களுக்குச் சென்று பணியாற்றுவதற்காக பொலீஸ் நிலையங்களுக்குச் சென்று பதிவு செய்யும்படி அவர்களை அதிகாரிகள் பணித்தனர்.

விடுதலைப் புலிகளுடன் சண்டையிட தம்மை எல்லைப்புறக் கிராமங்களுக்கு அனுப்பவேண்டாம் என்று அந்த ஊர்காவல் படையினர் பொலீஸ் அதிகாரிகளிடம் மன்றாடிக் கேட்டனர். அவர்களின் மன்றாட்டம் பலனளிக்கவில்லை.

அதனைத்தொடர்ந்து அவர்களில் 177 பேர் தமக்கு வழங்கப்பட்டிருந்த ஆயுதங்களை பொலீஸ் நிலையங்களில் கையளித்துவிட்டு தமது சொந்தக் கிராமங்களுக்கு திரும்பி விட்டனர். மீதி ஊர்காவல்படையினர் மட்டுமே கிழக்கிலும் மற்றும் வடமத்திய மாகாணத்திலும் உள்ள எல்லைக் கிராமங்களுக்கு பாதுகாப்பு வழங்கும் 'வேலை'க்கு உதவ இணக்கம் தெரிவித்தனர்.

### வடக்கு - கிழக்கில் 14,000 ஊர்காவலர்

நாடு முழுவதும் தற்போது சுமார் 18 ஆயிரம் ஊர்காவல்படையினர் பணிபுரிகின்றனர்.

இவர்களில் வடக்கு-கிழக்கு போர்முனைப் பிரதேசங்களில் மட்டும் இன்று 14 ஆயிரத்துக்கு அதிகமானோர் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

தாக்குதல் அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ள கிராமங்களுக்கு பாதுகாப்பு வழங்கக் கூடியதாக, வடமத்திய மாகாணத்திலும் கிழக்கிலும் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஊர்காவல் படையினரின் எண்ணிக்கை மற்றும் பொலீஸ் பிரிவுகளாலும் பாதுகாக்கப்பட்டு வந்தவை ஆகும்.

மெதிரிகிரியாத் தாக்குதலின்போது அப்பகுதியில் 'ரிசர்வ்' பொலீஸ் படையும் இராணுவத் தொண்டர் படையும் காவல் பணியில் ஈடுபட்டு இருந்தன. ஆனால் தாக்குதலை அவர்களால் முறியடிக்க முடியவில்லை.

உயர்மட்டத்தில் செய்யப்படும் மாற்றங்கள், சொந்த

### எல்லைக் கிராமங்களுக்கு செல்ல மறுப்பு பலர் ஆயுதங்களைக் கைவிட்டு ஓட்டம்

சண்டையில் நேரடியாக ஈடுபட்ட காலாட்படை சிப்பாய்களாவர்.

அடுத்த மாதத்தில் (செப்டம்பர்) 502 படையினர் தப்பி ஓடினர். சண்டையிடும் பிரிவுகளில் இருந்து மேலும் பல படையினர் தப்பி ஓடுகின்றனர்.

அராலிக் கண்ணிவெடிச் சம்பவத்தைத் தொடர்ந்து தப்பிஓடிய படையினரில் பலர் திரும்பிவரக் கூடும்

கையை அதிகரிக்க முடியும் என்று சில அதிகாரிகள் நம்புகின்றனர். இதற்கு ஊர்காவல் படையினர் முன்வராவிட்டால் அது வெறும் பிரச்சினையாக முடியும். சண்டையில் விடுதலைப் புலிகளை எதிர்நோக்க அவர்கள் பயப்படுகின்றனர்.

கடந்த செப்டம்பர் 15இல் மெதிரிகிரியா பகுதியில் 200 முஸ்லிம்கள் வரையில் கொல்லப்பட்டதன் பின்னரே எல்லைப் பகுதியில் ஊர்காவல் படையினரைக் கடுதலாக நிறுத்தும் முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

விடுதலைப் புலிகளின் தாக்குதலை முறியடிக்க சொற்ப பயிற்சி மட்டுமே பெற்ற ஊர்காவல் படையினரைப் பயன்படுத்தலாம் என்று அதிகாரிகள், நம்புகின்றனரா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்கான கிராமங்களில் பெரும்பாலானவை கடந்தகாலத்தில் இராணுவத்தின் நிரந்தர மற்றும் தொண்டர் படைப் பிரிவுகளாலும் பயிற்சிபெற்ற ஊர்காவல் படையினரையும் ரிசர்வ் பொலீஸாரையும் பயன்படுத்துவது ஆகியவை மூலம் கிராமங்கள் மீது விடுதலைப்புலிகள் நடத்தும் கடும் தாக்குதலை நிறுத்த முடியாது என்று பகுப்பாய்வாளர்கள் நம்புகின்றனர்.

#### பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்

அரசினால் பயிற்சி வழங்கப்பட்டு ஆயுதங்கள் பெற்ற ஆட்கள் தமது படைகளை விட்டு தப்பி ஓடுவது நாட்டின் பாதுகாப்புக்கு பாரதூரமான அச்சுறுத்தலாக முடியும் என்றும் அவர்கள் நம்புகின்றனர்.

போர்முனையில் டென்சில் கொப்பேகடுவ மற்றும் படைத் தளபதிகள் கொல்லப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து படைகளில் இருந்து தப்பி ஓடுவது உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது.

படைத் தளபதிகள் கொல்லப்பட்ட மாதத்தில் (ஆகஸ்ட்) மட்டும் 840 படையினர் தப்பி ஓடிவிட்டனர். அவர்களில் பெரும்பாலோர்

என்று அதிகார வட்டாரங்கள் தெரிவித்தன.

#### இராணுவ ரீதியில் வெல்ல முடியாது

சண்டையில் ஈடுபடும் படையினருக்கு நிலைவரம் பற்றி விவரிக்க அரசியல் மற்றும் இராணுவ அதிகார வட்டாரங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என்று சிலர் நம்புகின்றனர்.

படையினரின் மனோதிடத்தை அதிகரிப்பதற்கான வழிகளை மேற்கொள்ளாமல் மலிவான வழிகளில் இலாபத்தை அடையவே அரசியல்வாதிகளும் சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளும் நாட்டம் கொண்டுள்ளனர் என அவர்கள் நம்புகின்றனர்.

போர்முனைக்கு இடைக்கிடை சென்றுவிட்டு, அது பற்றிய படங்களை ரூபவாஹினியில் காட்டுவதனால் மட்டும் இராணுவ ரீதியில் விடுதலைப்புலிகளை அரசாங்கத்தினால் நிச்சயமாக வெல்ல முடியாது என்றும் அவர்கள் நம்புகின்றனர். ★

(தொடரும்)

# மங்கள முனசிங்காவின் யோசனைகளை நிராகரித்து தொண்டமான் கடிதம்

## தெரிவுக்குழு உருவான போது இருந்த அரசியல் சூழ்நிலை அலட்சியமாம்

இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண நியமிக்கப்பட்டிருக்கும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் தலைவர் திரு. மங்கள முனசிங்காவுக்கு காரசாரமான கடிதம் ஒன்றை அமைச்சர் தொண்டமான் அனுப்பி வைத்திருக்கிறார்.

இத்தெரிவுக் குழுவின் 46 உறுப்பினர்களில் ஒருவராக திரு. தொண்டமான் விளங்குகின்றார்.

27 - 10 - 1992 திகதியிடப்பட்ட தமது கடிதத்தில் திரு. தொண்டமான் கூறியிருப்பதாவது;

"இந்த நாடு இரண்டாகப் பிரிபடுவதைத் தவிர்க்க தமிழர்களுக்கு பூரணசுயாட்சி வழங்குவதே ஓரே ஒரு வழி என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தெளிவாக வலியுறுத்தியுள்ளது.

தமிழர்களின் எண்ணத்தை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உட்கிரகித்துத் தன்மயமாக்கிக் கொண்டுள்ளது என்பதை மீண்டும் வலியுறுத்த வேண்டிய தேவையில்லை.

தமிழர்களின் அபிலாஷைகள் குறித்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கூர்மையான முறையில் நுட்பமாகக் கிரகித்துக் கொண்டுள்ளது.

"நாடாளுமன்றத் தெரிவுக் குழு அமைக்கப்பட்ட போது இருந்த அரசியல் சூழ்நிலையை அலட்சியம் செய்வதாக இத் தெரிவுக் குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்ட விருப்ப யோசனைகள் அடங்கிய திட்டம் அமைந்திருந்தது துரதிருஷ்டவசமானது. அந்த திட்டம் எந்த விருப்பத்தையும் தெரிவிப்பதாக அமையவில்லை.

"இணக்கம் காண முடியாத நிலைப்பாட்டுக்கு சென்று மனவிரக்தி இனப் பிரச்சினை கடினமாகி வரும் வேளையில், இணக்க நிலை காணும் நடைமுறைக்கான கதவுகள் முன் கூட்டியே மூடப்பட்டு வருகின்றன.

சுயாட்சி

"தேசிய பிரதான நீரோட்டத்தில் தமிழர்களைக் கொண்டு வருவதற்கு யதார்த்த பூர்வமான சுயாட்சி அமைப்பை ஏற்றுக் கொள்ளும் அரசியல் தீர்வு ஒன்று காணப்பட வேண்டும் என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சந்தேகத்துக்கு இடமின்றி கூறி வருகின்றது. இந்த ஆட்சி ஒழுங்குகளை ஏற்றுக் கொள்ளக்கூடியதாக பிரிக்கப்படாத வடக்கு-கிழக்கு மாகாணம் இருக்க வேண்டும். இந்த அதிகாரப் பகிர்வு நடைமுறையினுள் முஸ்லிம் சமூகம் பூரணமாக சேர்க்கப்பட வேண்டும்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள சிங்கள சிறுபான்மையினர், (அவர்கள் மத்திய அரசிடமிருந்து எந்தக் காலத்திலும் ஆதரவைப் பெற்றாலும், கூட) வடக்கு-கிழக்கு மாகாணத்தில் சமத்துவமாக நடத்தப்படுவர் என மீண்டும் உறுதி வழங்கப்படும்.

முன் கூறப்பட்ட நோக்கங்களை வலியுறுத்தியே இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் ஏனைய தமிழ்க் கட்சிகளும் 4 அம்ச யோசனை திட்டம் ஒன்றை முன் வைத்தது. இந்த அடிப்படை நோக்கங்களை உதறிவிடுவது, நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிடமிருந்து சமாதானத்துக்கான முன் முயற்சியை தூக்கி எறிவதாக இருக்கிறது.

"தெரிவுக்குழுவிடம் சமர்ப்பித்த விருப்ப யோசனைகளில் தெரிவிக்கப்பட்டிருக்கும் 'இவை பற்றி மேலும் ஆராயப்பட வேண்டிய தேவை உள்ளது', "மேலும் பயன்படுத்துவது"—போன்ற சொற்றொடர்களில், 35 ஆண்டுகளுக்கு முன்னர் உருவாக்கப்பட்ட பண்டா - செல்வா உடன்படிக்கையில் காணப்பட்ட வெறும் வார்த்தை ஜாலம் வீசுகின்றது. அந்த உடன்படிக்கை தமிழர்களையும் முஸ்லிம்களையும் எவ் ... இல்லை.

"இப்போது சமர்ப்பிக்கப்பட்ட 'விருப்ப யோசனைத் திட்டம்' இடுகிடு பாதாளத்தில் இருந்து அவர்களை மேலே தூக்கி விடுவதாக இல்லை.

"இரண்டு தனித்தனி மாகாண சபைகள் என்ற விஷயத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தனது முன்னைய நிலைப்பாட்டை மீண்டும் எடுத்துச் சொல்ல விரும்புகின்றது.

"35 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழருக்கு ஒரு சபை தீர்வு யோசனை வழங்கப்பட்டது. இன்று— 35 ஆண்டுகளுக்குப் பின்னர்— இரண்டு தனித்தனி மாகாணசபை யோசனை— தமிழர்களின் முன்னால் வைப்பது, பரந்த முக்கியத்துவம் வாய்ந்த அரசியல் சோக நிகழ்ச்சி ஒன்றுக்குத் தீர்வு காணுவதில் இதயத்தைப் பிளக்கின்ற வையாலாகாத் தனத்தை வெளிப்படுத்துகின்றது.

#### யோசனை நிராகரிப்பு

"இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸினால் நன்கு ஆராயப்பட்டு முன்வைக்கப்பட்ட புதிய அம்சம் ஒன்று தேவையான மனப்பதிவை ஏற்படுத்தத் தவறிவிட்டது என்பது ஏமாற்றமளிக்கின்றது.

"ஒரு பிராந்திய சபை, இரண்டு கவுன்சில்கள் ஒன்றாகக் கூடுவது. இரண்டு நிறைவேற்று மந்திரிகள் இந்த உலகில் தமது இடங்களை பரஸ்பரம் உறுதிப்படுத்திக் கொள்வது மற்றும் இது போன்ற விஷயங்கள் தமிழர்கள் சம்பந்தப்பட்ட உண்மையான பிரச்சினைகளுடன் தொடர்பற்றவையாகும்.

மக்களின் அபிலாஷைகள், விருப்பயோசனைகளைத் தயாரிக்கும் போது கணக்கில் எடுக்கப்படவில்லை. பேரம் பேசுவது பற்றி யோசிப்பது சர்வமிகுந்த ஒன்றாக காணப்படுகின்றது. விருப்பயோசனைத் திட்டம் பரிகாரம் எதனையும் வழங்கவில்லை. இத்திட்டம் நோய் பற்றி மட்டுமே கூறுகிறது. தமிழர்களின் அரசியல் பிரச்சினையை இழிவுபடுத்துவதாகவே விருப்பயோசனை திட்டம் முழுவதும் அமைந்துள்ளது. இந்த விருப்பயோசனைத் திட்டத்தை அப்படியே இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் நிராகரிக்கிறது.

#### 4 அம்சத் திட்டம்

நாடாளுமன்றத் தெரிவுக் குழு முன்னால் வைக்கப்பட்ட 4 அம்சத் திட்டம் தமிழ்க் கட்சிகளாலும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸாலும் தயாரிக்கப்பட்டதாகும்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தனது யோசனைகளை 10-12-1991 இல் சமர்ப்பித்தது. முக்கிய பிரச்சினைகளில் அதிகாரப்பகிர்வு, காணி, சட்டம் — ஒழுங்கு பராமரிப்பு மற்றும் நிதி போன்றவற்றை பரிசீலனைக்கு நான் எடுத்தபோது இவை எல்லாம் அரசமைப்புச் சட்டத்தின் 13 ஆவது திருத்தத்தில் உள்ளன என்று ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எனக்குச் சொல்லப்பட்டது.

விருப்பயோசனைத் திட்டத்தில் (Options Paper) இப்பிரச்சினைகளில் ஒன்று கூட பிரஸ்தாபிக்கப்படாதது மனதைச் சங்கடப்படுத்துகின்றது.

"திரும்பத் திரும்ப நான் காலத்தின் முக்கியத்துவம் பற்றி வலியுறுத்தி வந்துள்ளேன். இந்த எச்சரிக்கையை கவனத்துக்கு எடுக்காது, பேச்சுக்களை நடத்தும் வேகத்தில் விசேட அடையாளமாக தாமதப்படுத்தும் போக்குத்தான் காணப்படுகின்றது.

"23-10-1992 அன்று அனுஷ்டிக்கப்பட்ட "கறுப்புவெள்ளி" தினம்—இனப்பிரச்சினை அவிட முடியாத அளவு சிக்கலாகி அமைதியாக இருந்துவரும் பிரதேசத்துக்கும் யுத்த முறையை விஸ்தரிப்பதில் முடியும் என்பதை எடுத்துக் காட்டியுள்ளது.

"நாடாளுமன்றத் தெரிவுக் குழு வேகமாகச் செயல்படத் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். ஒரு யோசனைக்கு

(6ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி நல்லம்மா சந்திரசேகரம்

கொழும்புத்துறையைச் சேர்ந்த திருமதி நல்லம்மா சந்திரசேகரம் கொழும்பில் 01 - 11 - 1992 அன்று காலமானார். இவர் காலஞ்சென்ற முதலியார் சந்திரசேகரம் அவர்களின் அன்பு மனைவியும், திருமதி கமலாசனி மகாதேவா (U. K), தியாகராஜா (கனடா), டாக்டர் (திருமதி) இராஜலக்ஷ்மி தேவராஜக்கோன் (U. K.), திருமதி மீனாம்பிகை திலகநாதன், திருமதி மகேஸ்வரி சிவலோகநாதன் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற மகாதேவா (U. K.), திருமதி ஜெயதேவி தியாகராஜா (கனடா) டாக்டர் தேவராஜக்கோன் (U. K.), திலகநாதன் (உதவிப் பொது முகாமையாளர் - இலங்கை வங்கி), சிவலோகநாதன் [சட்டத்தரணி] ஆகியோரின் அன்பு மாமியாரும், சோமசுந்தரம், காலஞ்சென்ற இராசநாயகம், தங்கம்மா [அவுஸ்திரேலியா] ஆகியோரின் அன்புச் சகோதரியும், டாக்டர் ரவீந்திரன் [U. K.], ஹரீந்திரன் [U. K.] சுரேக்கா [கனடா], நந்திக்கா [கனடா], கீதா [U. K.], ரூபன் [U. K.], தினானி, திலீபன், சகிஷ்ணா, விபிஷ்ணா, சுதாந்தி ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரிகைகள் 05 - 11 - 1992 இல் கொழும்பில் நடைபெற்றன என்பதை ஆழ்ந்த அனுதாபத்துடன் அறிவிக்கின்றோம்.

தகவல்:
திருமதி மகேஸ்வரி சிவலோகநாதன்.
(மகள்)

104, கொழும்புத்துறை வீதி,
கொழும்புத்துறை (23228)

## அருளம்பலம் அரசநாயகம்

யாழ்ப்பாணம்-வண்ணார்பண்ணை கலட்டி அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், சம்மனை சேர் வீதியை வசிப்பிடமாகக் கொண்டவரும், முன்னாள் மட்டக்களப்பு வியாபாரியுமான திரு. அருளம்பலம் அரசநாயகம் காலமானார்.

இவர் பகவதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற அருளம்பலம் - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், இராசநாயகம், துரைராஜா, சிவபாக்கியம், காலஞ்சென்ற இராஜேஸ்வரி, செல்வநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், கந்தையா (முன்னாள் சண்முகானந்தா ரெக்ஸ்ரைல்ஸ் ஊழியர்) வின் அன்பு மைத்துனருமானார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் அவரது சேர் றோட் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இன்று காலை 10-00 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக கரம்பை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந. கந்தையா
(மைத்துனர்)

(23234)

## ஆறுமுகம் பொன்னம்மா

சுருவிலைச் சேர்ந்த பொன்னம்மா காலமாகி விட்டார்.

இவர் ஆறுமுகத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கதிரேசர், வள்ளியம்மை அகியோரின் அன்பு மகளும், மங்கைபர்க்கரசி, சண்முகலிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற ஆச்சிமுத்து, காலஞ்சென்ற தங்கம்மா, காலஞ்சென்ற சொக்கலிங்கம், பாக்கியம், தேவராசா, பாக்கியலெட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும், இராசரெத்தினம், காலஞ்சென்ற மீனாட்சி ஆகியோரின் அன்பு மாமியும், இராசேஸ்வரி, இராசேந்திரம், கேதீஸ்வரி, கேதீஸ்வரன், விக்கினேஸ்வரன், முருகையா, கண்ணன், தயந்தி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (11-11-92) அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி. ப. 2 மணிக்கு கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்:
இராசரெத்தினம்.
(மருமகன்)

ஐயனார் கோவில் வீதி,
(மேயர் துரைராச வீதி)
வண்ணார்பண்ணை. (23233)

# அடக்க ஆராதனை

## செபஸ்ரியன் மமன்ஸ்

குருநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட செபஸ்ரியன் மமன்ஸ் காலமாகிவிட்டார். இவர் தங்கத்தின் அன்புக் கணவரும் வளர்மதி, கோகிலம், செனடி, யூட் சுந்தரம், கெவின், றோச், மேர்சி, மசறின் ஆகியோரின் அன்புத் தந்தையும், மொரன் மொழின், ஜெறாட் ராஜன், புஷ்பமலர் ஆகியோரின் மாமனாரும் கிறடி, விக்ரர், யோசை எட்வேட், அக்கினஸ், ஞானமணி, பிலோமினா ஆகியோரின் அன்புச் சகோதரனும், யோசை, சேவியர், றெஜி, யோகம், விக்சனோஸ், நீற்றம்மா, இறேனமணி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (11 - 11 - 1992) மாலை 3-00 மணிக்கு மணியம்தோட்டம் 2 ஆம் குறுக்குத் தெரு, 39 ஆம் இலக்கத்திலுள்ள அவரது இல்லத்திலிருந்து வசந்தபுரம், வெற்றிமாதா தேவாலயத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
தங்கம் (மனைவி).

இல 39 2 ஆம் குறுக்குத் தெரு,
மணியம்தோட்டம்,
யாழ்ப்பாணம். (23235)

# மூதூரில் 3 தமிழர் சுட்டுக்கொலை

கொழும்பு, நவ. 11

மூதூர் பகுதியில் கடந்த வாரத்தில் மூன்று தமிழர்கள் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

பச்சைனூர் ஆதி மூலமைச் சேர்ந்த கே. ஐயாத்துரைராசா, ஐ. மதியழகன், என். கே. தம்பிராஜா ஆகியோரே உயிரிழந்தவர்களாவர்.

இவர்கள் மூவரும் அருகிலிருந்த இருக்குவம் காட்டுக்குள் சென்றனர் என்றும் —

மறுநாள் காலையில் இவர்களது சடலங்கள் சூட்டுக்காயங்களுடன் காட்டுக்குள் காணப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ)

# ராஜினாமா

புதுடில்லி, நவ. 11

இந்தியாவின் சட்டமா அதிபர் ஜி ராமசாமி நேற்று ராஜினாமாச் செய்தார்.

பல கோடிரூபா சம்பந்தப்பட்ட பங்குச் சந்தை பேர ஊழலில் சம்பந்தப்பட்டிருந்தார் என்று எதிர்க் கட்சிகள் இவர் மீது குற்றஞ்சாட்டியதுடன் உடனடியாக இவர் ராஜினாமாச் செய்ய வேண்டும் என்றும் கோரியிருந்தன.

உடல்நிலை காரணமாகத்தான் ராஜினாமாச் செய்வதாக திரு. இராமசாமி கூறியிருக்கிறார். (உ-எ)

# 15 ஆம் திகதி..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வற்றை சிரமதானம் மூலம் துப்புரவாக்குவார்கள்.

அத்துடன் மாவீரர் வாரத்தை கொண்டாட முன்னோடியாக வளைவுகள், அலங்காரங்கள் போன்ற வற்றை அமைக்கும் வேலைகளும் இந்த நாட்களில் மேற்கொள்ளப்படும்.

எழுச்சி வாரத்தில் சிரமதானப் பணிகளை கோட்ட மட்டத்தில் விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு ஏற்பாடு செய்துள்ளது.

சிரமதானப் பணிகள் வட்டார ரீதியாகவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன சனசமூக நிலையங்கள், சமூக நிறுவனங்கள் இந்தப் பணியில் ஈடுபடும். (உ-3)

# 17 வயதுப் பிரிவில்...

(2 ஆம் பக்கத்தொடர்ச்சி)

அணியை எதிர்த்து சென் சார்ள்ஸ் ம. வி. அணி மோதும்.

இன்றைய ஆட்டத்தில் முதலாவது இடத்தைப் பெறும் அணிக்கு — கிளிநொச்சி மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளராகவிருந்து 1987 செப்டம்பர் 12 ஆம் திகதி வீரமரணம் அடைந்த —மாவீரன் இராஜேந்திரன் (ஜெகதீசன் சுகிரதன்) நினைவு சுற்றுக் கிண்ணம் தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையினால் வழங்கப்படவிருக்கிறது.

இன்றைய நிகழ்ச்சிக்கு யாழ்ப்பாணக் கல்விக் கோட்டப்பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. சி. வேலாயுதம் பிரதம விருந்தினராகப் பங்குபற்றுவார். தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்டத் தளபதி திரு. வ. செல்வராசா சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வார்.

17 வயதுப் பிரிவினருக்கான கோட்ட நிலைப் போட்டிகளில் நூற்றுக்கு மேற்பட்ட அணிகள் பங்குபற்றியதும்—

இறுதி நிலைப் போட்டிகளுக்கு 24 அணிகள் தெரிவு செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கவையாகும். (உ)

# மங்கள முனசிங்கா...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்த இன்னொரு யோசனை என்று தேவையற்ற விதத்தில் சமர்ப்பித்து தனது சக்தியை தெரிவுக் குழு வீரயமாக்கிக் கொண்டு போனால் ஒரு பலனும் ஏற்படப்போவது இல்லை.

தற்போது இடம்பெற்று வரும் யதார்த்த நிலைக்குப் புறம்பான பேச்சுவார்த்தைகளில் தொடர்ந்து கலந்து கொள்வது பற்றி இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைமைப்பீடம் தீவிரமாக மீள்பரிசீலனை செய்து வருகிறது.

இவ்வாறு திரு. தொண்டமான் ...

# மகனை மீட்க கிணற்றில் குதித்த தாயும் மரணம்

வடமராட்சி கிழக்கு, நவ. 11

கிணற்றுக்குள் விழுந்த மகனை மீட்பதற்குத் தாய் கிணற்றுக்குள் குதித்தார். ஆனால் தாயால் மகனை மீட்கமுடியாமற் போய்விட்டது. இருவரும் கிணற்றுக்குப் பலியானார்.

பருத்தித்துறையில் திங்கட் கிழமை நடந்த இச் சம்பவத்தில் திருமதி ஸ்ரீகாந்தன் புனிதராணி (27 வயது), அவரது மகன் சுகந்தராஜ் (6 வயது) ஆகிய இருவரும் மந்திகை ஆதார வைத்தியசாலையில் மரணமானார்கள்.

பருத்தித்துறை காவல் துறையினர் இச் சம்பவம் குறித்து விசாரணை மேற்கொண்டுள்ளனர். (க-144)

# மாவுடன் "குமாரி" வந்தது

யாழ்ப்பாணம், நவ. 11

திருகோணமலையில் இருந்து 3 ஆயிரத்து 200 மெற்றிக் தொன் மாவை ஏற்றிக் கொண்டு "குமாரி" கப்பல் நேற்று பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்தது.

கப்பலில் இருந்து மாவை இறக்கும் வேலைகள் நேற்றே ஆரம்பிக்கப்பட்டன. (உ-3-144)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி நாகலிங்கம் அன்னப்பிள்ளை
(நயினாதீவு)

நயினாதீவு 4 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், தற்போது 52/3, பலாலி வீதி, திருநெல்வேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகலிங்கம் அன்னப்பிள்ளை (10-11-1992) நேற்றுக் காலமானார்.

இவர் காலஞ்சென்ற ஒப்பந்தகாரர் நாகலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் கிளிநொச்சிக் கச்சேரியில் எழுதுநராக இருந்து ஓய்வுபெற்ற ஏகாம்பரநாதன் (ராம்) அவர்களின் அன்புத் தாயாரும், திருமதி செல்வமலரின் அன்பு மாமியாரும், சங்கர் (சுவிஸ்), கோகர், சேகர், சுதாகர் (யாழ். இந்துக்கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (11-11-1992) இன்று புதன்கிழமை மேற்படி இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காகப் பூதவுடல் பி. ப. 4 00 மணிக்கு கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
நா. ஏகாம்பரநாதன்
(மகன்)

52/3, பலாலி வீதி,
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம். (23237)

## சின்னத்தம்பி வல்லிபுரம்

அரம்பன் தெற்கைச் சேர்ந்த சின்னத்தம்பி வல்லிபுரம் அவர்கள் 09 - 11 - 1992 திங்கட்கிழமை கந்தர் மடத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற யோகம்மாவின் அன்புக் கணவரும், திருமதி சின்னையா - நாகம்மாவின் அன்புச் சகோதரரும், ஜெயபாலசிங்கம் (லண்டன்), ஜெயலட்சுமி, பாக்கியலட்சுமி, ஜெகதாம்பிகை (கனடா), விஜயலட்சுமி, வரதலட்சுமி, (கனடா), தனபாலசிங்கம் (கனடா), தனலட்சுமி ஆகியோரின் அன்புத் தந்தையும், கமலாதேவி (லண்டன்) சிவசுப்பிரமணியம் (உரிமையாளர், ஜெயலக்சுமி கம்பனி), அருணாசலம் (ஜேர்மனி), வைத்திலிங்கம் (கனடா), காலஞ்சென்ற மகேந்திரன், குலசிங்கம் (ஜேர்மனி), குகநாயகி (கனடா), சிவானந்தசோதி (உரிமையாளர், சோதி ஜுவலறி) ஆகியோரின் அன்பு மாமனாரும், சிவதாஸ் (மருத்துவபீடம், யாழ் பல்கலைக்கழகம்), ஜெயந்தி, சண்முகதாஸ் (மருத்துவபீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்), வசந்தி, சுகந்தி, கணேஷ், லக்சி, கிரிதரன், சுதாகரன், பாஸ்கரன், சஷின், புவனேஷ், சுகா, பிரியா, நவோதன், நிசாந்தி, நிறஞ்சி, தீபன், பேபி, திரு. பூமா, ஜெயசீலன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல, 59 குமாரசாமி வீதி, கந்தர்மடம் இல்லத்தில் 10 11-92 இல் நடைபெற்றன இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்:
சி. சிவதாஸ்

58, குமாரசாமி வீதி,
யாழ்ப்பாணம். (23236)

## அம்பலவாணர் அமிர்தலிங்கம் [ஐயாத்துரை]
(முன்னாள் வர்த்தகர்)

மந்துவிலைப் பிறப்பிடமாகவும் கொடிகாமம் கச்சாய் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் அமிர்தலிங்கம் நேற்றுக் காலமானார். இவர் தங்கம்மாவின் அன்புக் கணவரும், சிவநேசம், சிவராசா, சிவசுதா (சுவிஸ்), சிவசாந்தி (ஆசிரியை), சிவகலா ஆகியோரின் தந்தையும், நடராசா, தர்மலிங்கம் (சுவிஸ்), சவுந்தலா ஆகியோரின் மாமனாரும், பாஸ்கரன், துசிகரன், துஷந்தி, சுபாஸ்கரன், பிரதீபன், சஞ்சீவன் (சுவிஸ்) ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற அ. பாலசிங்கத்தின் சகோதரனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம், இராசையா, யோகராசா (கனடா), நல்லம்மா, மகேஸ்வரி, இராசம்மா ஆகியோரின் மைத்துனரும், திருமதி இராசையா, திருமதி யோகராசா, காலஞ்சென்ற வேதாரணியம் (நெசவு ஆசிரியர்), காலஞ்சென்ற கனகரட்ணம், (இ. போ. ச. நடத்துனர்), சண்முகலிங்கம் (முன்னாள் கொடிகாமம் ப. நோ. கூ. சங்க காசாளர்) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

ஈமக்கிரியைகள் இன்று பிற்பகல் 2 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கச்சாய் பாலாத்தான் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகன்
அ. சிவராசா

கச்சாய் வீதி,
கொடிகாமம். (23238)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 11-11-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org